**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE  DHARMAPURI</u>**

**O.S. No. 266  of 2022**

Deposition of **P.W. 2**

Name of the Witness: திரு.கண்ணப்பன்

Date **: 13.03.2024**

<u>குறுக்கு விசாரணை</u>

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு 58 வயது முடிந்து விட்டது. நான் 2010லிருந்து சூளூரில் வசித்து வருகிறேன். நான் வேலை செய்யும் நிறுவனத்தின் குடியிருப்பில் வசித்து வருகிறேன். என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எல்லாம் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. வாதிகள் என்னுடைய மனைவிகள். என் முதல் மனைவியின் சம்மதத்தின் பேரில் தான் 2ம் வாதியை நான் திருமணம் செய்து கொண்டேன். நான் 2வது திருமணம் செய்து கொண்ட பிறகு என்னுடைய முதல் மனைவிக்கு குழந்தை பிறந்தது. என் முதல் திருமணம் நடந்து 8, 9 வருடங்கள் கழித்து 2வது திருமணம் செய்து கொண்டேன். என்னுடைய முதல் திருமணம் நடந்த தேதி, வருடம் நியாபகம் இல்லை. என்னுடைய முதல் திருமணம் நிலுவையில் இருக்கும் போதே இரண்டு வருடங்களில் 2ம் வாதியை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. 8 வருடம் கழித்து தான் 2வது திருமணம் செய்து கொண்டேன். தாவா

சொத்து எனது மாமியாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். என் மாமியாருக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு என் மாமியார் விசாலாட்சி கிரையம் போட்ட விவரம் எனக்கு தெரியும். பிரதிவாதியை தவிர வேறு யாருக்கும் எனது மாமியார் கிரைய ஒப்பந்தம் போடவில்லை. நான் சொல்வது பொய் என்றாலும் விசாலாட்சி தாவா கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக எருமியாம்பட்டியை சேர்ந்த இ.வி.நடேசன் என்பவருக்கு 19.06.2016 அன்று கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார் என்றால் அதை பற்றி தெரியாது.

2) பிரதிவாதியுடன் 2016ல் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. தேதி, மாதம் தெரியாது. சாட்சி தற்போது 19.08.2016 என்றும் எனக்கு சரியாக நியாபகம் இல்லை என்று சொல்கிறார். தாவா கிரைய ஒ்ப்பந்தம் ஏற்படும் போது நான், வாதிகள், எனது மாமியார். என் மைத்துனர் ரவி இருந்தார்கள். 2ம் வாதி தாவா கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். வா.சா.ஆ2 கிரைய ஒப்பந்தத்தில் 2வது சாட்சியாக என்னுடைய 2வது மனைவி 2ம் வாதி கையெழுத்து போட்டுள்ளார். நான் தாவா கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போடவில்லை. 2வது வாதிக்கு அடுத்ததாக ரத்தினம் என்பவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். அந்த கிரைய ஒப்பந்தத்தை தயார் செய்த

நபரின் பெயர் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் பதிவு செய்வதற்கு சார்பதிவாளர் அலுவலகம் சென்ற நேரம் எனக்கு தெரியவில்லை. 2ம் வாதி தாவா கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போட்ட விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான மூல பத்திரம் தொலைந்து போன விவரம் எனக்கு தெரியாது. மூல பத்திரம் தொலைந்து போய் விட்டதால் தான் என் மாமியார் பிரதிவாதிை பலமுறை கூப்பிட்டும் கிரையம் செய்து கொடுக்க வரவில்லை என்றால் சரியல்ல. என் மாமியார் பலமுறை கூப்பிட்டும் பிரதிவாதி வரவில்லை. தாவா சொத்தின் மூலபத்திரம் தொலைந்து போகவில்லை. இருக்கிறது. என் மைத்துனர் தாவா சொத்தின் மூலபத்திரம் காணவில்லை என்று நாளிதழில் விளம்பரம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. என் மாமியாரும், வாதிகளும் என் மைத்துனரும் அசல் தாவா சொத்தின் மூல பத்திரம் தொலைந்து விட்டது என்று சொல்லி பிரதிவாதியை காலம் தாழ்த்தி ஏமாற்றி விட்டார்கள் என்றால் சரியல்ல.

3) நானும், எனது மனைவிகளும் கோயபுத்தூரில் தான் குடியிக்கிறோம். என் மாமியார் விசாலாட்சி புதுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து அங்கேயே தான் இறந்து போய் விட்டார் என்றால் சரிதான். பிரதிவாதி என் மாமியார் விசாலாட்சியிடம் கிரையம் செய்து கொடுக்க சொல்லி பலமுறை கேட்டார் என்றால் சரியல்ல. என்

மாமியார் இறந்த பிறகு வாதிகள், நான், என் மைத்துனர் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து தாவா மூலபத்திரம் காணாமல் போய் விட்டது என்று சொல்லி பிரதிவாதியை ஏமாற்றி சொத்தை அதிகவிலைக்கு விற்க வேண்டும் என்று இந்த வழக்கை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி இதய நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதை தெரிந்து கொண்டே நான், 2ம் வாதி சுபத்ரா, பாலு, ஏ.பள்ளிபட்டி காவல் உதவி ஆய்வாளர் உதவியுடன் பிரதிவாதியை மிரட்டி அசல் கிரைய ஒப்பந்த பத்திரத்தை மிரட்டி வாங்கி கொண்டோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விடுவார் என்பதால் தான் இந்த வழக்கை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா அசல் கிரைய ஒப்பந்தத்தை பெற்ற பிறகு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பாப்பம்பாடியை சேர்ந்த ராமசாமி என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்து அதை பதிவு செய்ய போனோம் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் காலவாதி ஆவதற்கான காரணம் நானும், வாதிகள் தான் என்றால் சரியல்ல. அதனால் கிரைய ஒப்பந்தம் படி வாதிகள் பிரதிவாதிக்கு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

4) தாவா கிரைய ஒப்பந்தத்தின் பேரில் எனது மாமியார் ரூபாய 80,000ஆயிரம் முன் பணம் வாங்கயிருந்தார். பிரதிவாதி எந்த தேதியில் சட்ட அறிவிப்பு கொடுக்கப்பட்டது தெரியுமா என்றால் சட்ட

அறிவிப்பே கொடுக்கவில்லை. பிரதிவாதி சட்ட அறிவிப்பை வாங்க மறுத்து விட்டார். ஆனால் அவர் 4 மாதத்திற்குள் சட்ட அறிவிப்பு எதுவும் எங்களுக்கு அனுப்பவில்லை. சட்ட அறிவிப்பே பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றும், அதை பிரதிவாதி வாங்க மறுத்து விட்டார் என்று நாங்களே ஆவணம் தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 13 சென்ட் அரசாங்காத்தால் கையகபடுத்தப்பட்டு விட்டது என்றால் சரிதான். அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு நாங்களே இழப்பீடு பெற்று கொள்ள வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் கிரையபத்திரம் காணாமல் போய் விட்டது என்று சொல்லி பிரதிவாதியை காலம் தாழ்த்தி வந்தோம் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் படி நடக்காமல் தற்போது அந்த கிரைய ஒப்பந்தத்தை நடைமுறை படுத்தாமல் காலம் தாழ்த்திவிட்டு தற்போது கிரைய ஒப்பந்தமே செல்லாது என்று பரிகாரம் கேட்பதற்கு எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

5) தாவா சொத்தின் செக்குபந்திகள் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் 109/9. தாவா சொத்து தருமபுரி - அரூர் நான்கு வழி சாலைக்கு அருகே உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 109/9ல் 30 சென்ட் மட்டும் தான் கிரைய ஒப்பந்தத்திற்கு சம்பந்தப்பட்டது. கூடுதலாக 5 சென்ட் நிலம் பிரதிவாதிக்கு எழுதி

கொடுப்பதாக பேசப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் 30 சென்ட்டில் தான் அரசாங்கம் 13 சென்ட் கையகப்படுத்தி சுங்க சாவடி அமைத்துள்ளது என்றால் சரிதான். அரசாங்கம் 20சென்ட் கையகப்படுத்தியுள்ளது என்றால் சரியல்ல. 13 சென்ட் தான் கையகப்படுத்தியுள்ளது. பிரதிவாதி எங்களை தாவா சொத்தில் இருக்கும் வில்லகங்களை நீக்கி சொத்தை கிரையம் செய்து கொடுக்க சொல்லி பலமுறை கேட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் படி கிரைய பத்திரம் செய்து கொடுக்க சொல்லி பலமுறை கேட்ட பிறகு தான் சொத்திற்கான மூல பத்திரம் காணவில்லை என்று பொய்யாக பேப்பர் விளம்பரம் கொடுத்தோம் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் பின்னிட்டு எனதுமாமியார் விசாலாட்சி பிரதிவாதியிடம் எவ்வளவு பணம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் பணமே வாங்கவில்லை. என் மாமியார். வாதிகள், என் மைத்துனர் எல்லோரும் சேர்ந்து பிரதிவாதியிடம் ரூ.17லட்சம் பணத்தை வாங்கி நடேசனிடம் கொடுத்து அவரிடம் போட்ட கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு அந்த கிரைய ஒப்பந்தத்தையும் பிரதிவாதியிடம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்களுக்கு ரூபாய் 20ஆயிரம் மட்டும் தான் பாக்கி கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. நடேசனிடம் வாங்கிய கிரைய ஒப்பந்த பத்திரத்தில் வாதிகள், விசாலாட்சி, என் மைத்துனர் எல்லோரும் கையெழுத்து போட்டு பிரதிவாதியிடம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

பிரதிவாதியின் பாக்கி தொகையான ரூபாய் 20ஆயிரத்தை பெற்று கொண்டு வாதிகள் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வாதிகள் என்னுடைய மனைவிகள் என்பதால் அவர்களுக்கு சாதகமாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.